# பிறப்பு முதல் ஆறுவயது வரை–வளர்ச்சியும் மேம்பாடும்

## *தயவுசெய்து கேளுங்கள். குழந்தைகள் காத்திருக்க முடியாது.*

Washington State Department of
CHILDREN, YOUTH & FAMILIES

## என்ன

பெற்றோருக்காக இந்த வரைபடம் தீட்டப்பட்டுள்ளது. ஆனால் இளங்குழந்தைகளை அறிந்திருக்கும் அல்லது பணிபுரியும் யாருக்குமே இது பயனுள்ளது.

## ஏன்

குழந்தையின் பார்வை, கேட்பு மற்றும் வளர்ச்சியில் சாத்தியமான பிரச்சினைக்குரிய பகுதிகளை அடையாளம் காண்பதில் முன்திரை வரைபடம் ஒரு விரைவான வழியாகும். இந்த வரைபடம் குழந்தையை முழுமையாகக் காண உதவும். சிந்தித்தல், சமூகத் திறன்கள், காதால் கேட்பது, பேசுவது மற்றும் நகரும் செயல்பாடுகளில் குழந்தையின் மேம்பாட்டை நீங்கள் கவனிப்பீர்கள். சில நகர்வுத் திறமைகளுக்கு சிறிய தசைகள் (விரல்கள் போன்றவை) பயன்படுகின்றன. பிறவற்றுக்கு பெரிய தசைகள் (கால்கள் போன்றவை) தேவை. குழந்தைகளின் ஒவ்வொரு வயதிலும் கண்பார்வை மற்றும் கேட்புத்திறனைக் கவனிப்பது முக்கியம்.

**முக்கியம்!** இந்த வரைபடம் உங்கள் குழந்தையின் பார்வை, கேட்பு மற்றும் வளர்ச்சியை நீங்கள் கண்காணிக்க உதவக்கூடிய விரைவான வழியாகும். இதுவொரு வளர்ச்சி சோதனையாகவோ, கணக்கீடாகவோ அல்லது மதிப்பீடாகவோ கருதக்கூடாது.





## எப்படி

ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் பெரும்பாலான குழந்தைகளால் செய்யக்கூடியதாக பட்டியலிடப்பட்ட நடவடிக்கைகளை சிலநேரங்களில் அந்தப் பிரிவில் முதல்வயதுக்கும் இரண்டாம் வயதுக்கும் இடையே உள்ள குழந்தைகளால் செய்யமுடியும். உதாரணமாக 12 மாதங்களில், பெரும்பாலான குழந்தைகளால் பட்டியலிடப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் 6 முதல் 12 மாதப் பிரிவுக்குள் செய்யமுடியும். எனினும், பெரும்பாலான குழந்தைகளால் இந்தச் செயல்பாடுகள் அனைத்தையும் 6 மாதங்களில் செய்யமுடியாது. ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் இவ்வாறே இருக்கும். எனவே ஒரு குழந்தை ஒரு வயது மட்டத்தின் தொடக்கத்தில் எல்லா நடவடிக்கைகளையும் செய்யமுடியாவிட்டால் அதிகம் கவலைப்படத் தேவையில்லை. வெவ்வேறு விகிதங்களில் குழந்தை வளர்ச்சி இருப்பதால், ஒரு வேலையில் குழந்தை பின்தங்கியிருப்பதால் பீதியடைய வேண்டாம்.

குழந்தையின் வயதின்கீழும் பார்வை மற்றும் கேட்புத்திறனின்கீழும் பட்டியலிடப்பட்ட நடவடிக்கைகளையும் படியுங்கள். குழந்தை விளையாடும்போது பார்க்கவும் உற்றுக்கேட்கவும் செய்யுங்கள். குழந்தையால் செயல்பாடுகளைச் செய்யமுடியுமா? குழந்தைக்கு ஒவ்வொரு நடவடிக்கைக்கும் தேவையான நேரம், வெளி மற்றும் பொருட்கள் இருப்பது முக்கியம். உதாரணமாக, குழந்தையிடம் காகிதமும் பென்சில் அல்லது கிரேயானும் கொடுக்கவில்லையெனில், குழந்தையால் ஒரு முகத்தை வரையமுடியவில்லை என்று சொல்லாதீர்கள்.

வரைபடத்தைப் பயன்படுத்தி பல நாட்களுக்கு குழந்தையை பார்த்து உற்றுக்கேட்டு உங்களுக்கிருக்கும் ஏதேனும் கவலைகளைக் குறிப்பிடுவதற்கு நீங்கள் விரும்பலாம். ஒரு குழந்தை ஒரு பிரிவின் மேல் வயது மட்டத்தில் இருந்து எல்லா நடவடிக்கைகளையும் செய்யமுடியாவிட்டால், குடும்பங்கள் தங்கள் அவதானிப்புகளை ஒரு நிபுணருடன் பகிரலாம். அவர்கள் குழந்தையின் வளர்ச்சியை உன்னிப்பாகப் பார்ப்பார்கள்.

## எப்போது

குழந்தை விளையாடும்போது பார்க்கவும் உற்றுக்கேட்கவும் செய்யுங்கள். குழந்தை வழக்கமாக எப்படியிருக்கும் என்பதை நீங்கள் தேடுகிறீர்கள். **குழந்தைக்கு உடல்நலமில்லை, சோர்வாயிருக்கிறது அல்லது எரிச்சலோடு இருக்கிறபோது இந்த வரைபடத்தைப் பயன்படுத்தாதீர்கள்.**

## அடுத்து என்ன

குழந்தையின் வளர்ச்சி குறித்து உங்களுக்குக் கவலையிருந்தால், உங்கள் பகுதியிலுள்ள Family Resources Coordinator (குடும்ப வள ஒருங்கிணைப்பாளர், FRC) உள்பகுதித் தலைவரின் பெயரைப் பெறுவதற்கு இந்தப் பிரசுரத்தின் மறுபக்கத்தில் பட்டியலிட்டுள்ள 'Help Me Grow (நான் வளர உதவுங்கள்)' Washington எண்ணை நீங்கள் அழைக்கலாம். மேலும், குழந்தையின் மருத்துவர், சுகாதாரத்துறை அல்லது பள்ளி மாவட்டம் ஆகியோர் குடும்பங்களுக்கு உதவமுடியும். குழந்தையின் வளர்ச்சி, பார்வை மற்றும்/ அல்லது கேட்புத்திறனை மேலும் முழுமையாக சோதிக்கும் அருகாமையிலுள்ள முகமையையும் நீங்கள் கண்டறியலாம்.



## பார்வை

***உங்கள் குழந்தை...***

- ☐ கண்ணோடு கண் தொடர்பு கொள்கிறதா (உங்கள் கண்களைப் பார்க்கிறதா)
- ☐ அவர்களின் கண்களால் நகரும் பொருளைப் பின்தொடர்கிறதா
- ☐ பொருட்களின் மேல் அடிக்கடி மோதாமல் நடந்து, தவழ்ந்து செல்கிறார்களா
- ☐ இரு கண்களையும் பயன்படுத்தி மனிதர்களையும் பொருட்களையும் பார்க்கிறார்களா
- ☐ பொருட்களை இயல்பான தூரத்தில் வைத்திருக்கிறார்களா (6 மாதங்களுக்குப் பிறகு)
- ☐ நிழல்கள் அல்லது வித்தியாசமாகத் தோற்றமளிக்கும் பகுதிகளில் (கம்பளம், தரை ஓடு) சுமூகமாக நடந்து தவழ்ந்து செல்கிறார்களா
- ☐ (9 மாதங்களுக்குப் பிறகு) மாறுகண் பார்வை அல்லது ஒருக்கணிப்புப் பார்வை இல்லாமல் மனிதர்களையும் பொருட்களையும் பார்க்கிறார்களா
- ☐ சிவந்த கண்களாகவோ அல்லது கண்ணீர் கட்டியிருப்பது போன்று இல்லாமல் தெளிவான கண்களைக் கொண்டிருக்கிறதா

## செவித்திறன்

***உங்கள் குழந்தை...***

- ☐ வீட்டில் ஏற்படும் சத்தங்கள் பற்றிய விழிப்புணர்வை காட்டுகிறார்களா (தொலைபேசி, கதவை தட்டுதல், தொலைக்காட்சி)
- ☐ மிகவும் சத்தமாகவோ அல்லது மிகவும் மென்மையாகவோ இல்லாத ஒரு குரலை பயன்படுத்துகிறதா
- ☐ சத்தத்தை உருவாக்குகிற பொம்மைகளை வைத்து விளையாடுகிறார்களா (கிலிகிலிப்புகள், மணிகள்)
- ☐ சத்தங்களை கேட்டு அதைப்போலவே சத்தம் எழுப்புகிறதா (1 வருடத்திற்குப் பிறகு)
- ☐ இரண்டு வயதுக்குப் பிறகு ("ஸ்" அல்லது "ங்க்")-ல் முடிவடையும் சில வார்த்தைகளை பயன்படுத்துகிறார்களா
- ☐ வாய்மொழி உத்தரவுகளை பின்பற்றுகிறார்களா
- ☐ தொலைக்காட்சி அல்லது வானொலியில் மிதமான ஒலியை பராமரிக்கிறார்களா
- ☐ சிரமமின்றி கதைகள், ஒலிநாடாக்கள் அல்லது தொலைக்காட்சியைக் கவனிக்கிறார்களா
- ☐ பெரும்பாலானவர்கள் புரிந்துகொள்ளும்படி பேசுகிறார்களா (2-1/2 வயதுக்கு மேலிருந்தால்)
- ☐ மற்றொரு அறையிலிருந்து கூப்பிட்டால் உங்களிடம் வருகிறார்களா (2 வருடங்களுக்கு பிறகு)



# பிறப்பு முதல் ஆறுவயது வரை–வளர்ச்சியும் மேம்பாடும்

## தயவுசெய்து கேளுங்கள். குழந்தைகள் காத்திருக்க முடியாது.

Washington State Department of
CHILDREN, YOUTH & FAMILIES

## பெற்றோருக்கு:

உங்கள் குழந்தையின் வாழ்க்கையில் ஒரு பெற்றோராக நீங்கள்தான் மிக முக்கியமான நபர். உங்கள் குழந்தையை உங்களுக்கு நன்றாகத் தெரியும். உங்கள் குழந்தையின் வளர்ச்சி குறித்த கவலை இருந்தால், நீங்கள் ஒரு மதிப்பாய்வினைக் கோரலாம். உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது கவலைகள் இருந்தால் தயவுசெய்து கேளுங்கள். உங்கள் பகுதியில் உள்ள Family Resources Coordinator (குடும்ப வள ஒருங்கிணைப்பாளர், FRC) யாரென்று அறிய `Help Me Grow (நான் வளர உதவுங்கள்)' Washington எண்ணை அழையுங்கள்.

## வழங்குநர்களுக்கு:

குழந்தைகள் வெவ்வேறு வழிகளில் வளர்ச்சியையும் மேம்பாட்டையும் அடைகிறார்கள். குழந்தையின் வளர்ச்சி குறித்து குடும்பங்களுடன் சீரான இடைவெளிகளில் பேச முயலுங்கள். அவர்களிடம் குழந்தை புதிதாக என்ன திறமைகளைக் கற்றுக்கொண்டுள்ளது, அவர்களுக்கு என்ன கவலைகள் உள்ளன என்பதைக் கேட்டு உங்கள் சொந்த அவதானிப்புகளைப் பகிர்ந்துகொள்ளுங்கள். அவர்களுக்கு கவலைகள் இருப்பின், கூடுதல் தகவல்களுக்கும் உதவிக்கும் 'நான் வளர உதவுங்கள்' Washington எண்ணை அழைக்கலாம் என்பதை குடும்பங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். அவர்கள் உங்கள் பகுதியிலுள்ள உள்ளூர் Family Resources Coordinator (குடும்ப வள ஒருங்கிணைப்பாளர், FRC)-ஐ பரிந்துரைப்பார்கள். நீங்களே 'Help Me Grow (நான் வளர உதவுங்கள்)' Washington-ஐ அழைத்து FRC-யின் பெயரையும் தொலைபேசி எண்ணையும் பெற்று அந்தத் தகவலை குடும்பத்துடன் நேரடியாகப் பகிரலாம்.

### பிறப்பு - 3 மாதங்கள் *உங்கள் குழந்தை...*

- [ ] குப்புறப் படுத்துக்கொண்டு அவர்களது தலையையும், மார்பையும் தூக்குகிறார்களா
- [ ] அவர்களது கைகளையும், கால்களையும் எளிதாக நகர்த்துகிறார்களா
- [ ] அவர்களது தலையை பக்கவாட்டில் திருப்புவதன் மூலம் நீங்கள் செய்வதை பின்பற்றுகிறார்களா
- [ ] ஒரு பாட்டிலையோ அல்லது மார்பகத்தையோ எளிதாக எடுத்து நன்றாக உறிஞ்சுகிறார்களா
- [ ] திடீரென ஏற்படும் உரத்த சத்தங்களில் திடுக்கிடவோ அல்லது அழவோ செய்கிறார்களா
- [ ] உங்களைப் பார்க்கிறார்களா, உங்கள் முகத்தை உற்றுநோக்குகிறார்களா
- [ ] கொப்பளிப்பு அல்லது கொஞ்சும் ஒலிகளை உருவாக்குகிறார்களா
- [ ] நீங்கள் சிரிப்பதையோ அல்லது பேசுவதையோ பார்த்து பதிலுக்கு சிரிக்கிறார்களா
- [ ] சௌகரியமாக இருக்கும்போது அமைதியாக இருக்கிறார்களா

### 3 - 6 மாதங்கள் *உங்கள் குழந்தை...*

- [ ] மல்லாந்து படுத்துக்கொண்டிருக்கும்போது கால்களைக் கொண்டு விளையாடுகிறார்களா
- [ ] குப்புறப் படுத்துக்கொண்டிருக்கும்போது கைகளை உந்தி அவர்களது தலை மற்றும் மார்பை உயர்த்துகிறார்களா
- [ ] உதவி ஏதுமின்றி தங்கள் தலையை நேராகவும் நிலையாகவும் வைத்திருக்கிறார்களா
- [ ] குப்புறக் கிடக்கும் நிலையிலிருந்து மல்லாந்த நிலைக்கு, திரும்ப பழைய நிலைக்கு என உருள முடிகிறதா
- [ ] அவர்களின் இரண்டு கைகளையும் தட்டி விளையாடுகிறார்களா
- [ ] ஒரு பொம்மையை எட்டி எடுக்கிறார்களா
- [ ] அவர்களின் எல்லைக்குள் வைத்துள்ள பொம்மையை எடுக்கிறார்களா
- [ ] சத்தம் வரும் திசை நோக்கி அவர்களது தலையை திருப்புகிறார்களா
- [ ] நிறைய மாறுபட்ட சத்தங்களை எழுப்புகிறார்களா
- [ ] சத்தமாக சிரிக்கிறார்களா
- [ ] விருப்பங்கள், வெறுப்புகளைக் காட்ட முயற்சி செய்கிறார்களா

### 6 - 12 மாதங்கள் *உங்கள் குழந்தை...*

- [ ] கொஞ்சம் உதவி செய்தால் அவர்களே எழுந்து நிற்கிறார்களா
- [ ] பொம்மைகளுடன் விளையாடும்போது உதவியின்றி உட்காருகிறார்களா
- [ ] ஒரு கையிலிருந்து மற்றொரு கைக்கு பொருட்களை மாற்றுகிறார்களா
- [ ] விரல்களைக் கொண்டு அவர்களே சாப்பிடுகிறார்களா
- [ ] பாய்-பாய் என்று கைகளை ஆட்டுகிறார்களா
- [ ] அசைவுகள் மற்றும் சத்தங்களைக் கொண்டு அவர்களது தேவைகளை உங்களுக்கு தெரிவிக்கிறார்களா
- [ ] பேசும் ஒலிகளை காப்பியடிக்கிறார்களா ("பா-பா", "கா-கா")
- [ ] பெரியவருடன் விளையாடும்போது தங்கள்முறையை எடுக்கிறார்களா (நடவடிக்கைகள், ஒலிகள், அல்லது முகபாவனைகள்)
- [ ] ஓர் எளிய கேள்வியை அவர்கள் புரிந்துகொண்டதை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறார்களா ("இன்னும் கொஞ்சம் வேண்டுமா?")
- [ ] அந்நியர்களிலிருந்து பெற்றோர்களை அறிகிறார்களா

### 12 - 18 மாதங்கள் *உங்கள் குழந்தை...*

- [ ] தனியாக நடக்கிறார்களா
- [ ] சிறிய பொருட்களை எடுக்கிறார்களா (திராட்சை அளவு)
- [ ] பொருட்களை கொள்கலன்களில் போட்டு அடைக்கிறார்களா
- [ ] ஒரு பொருளை மற்றொரு பொருளின் மேல் வைக்கிறார்களா
- [ ] ஸ்பூனைக் கொண்டு தாமாகவே சாப்பிடுகிறார்களா
- [ ] "மாமா" அல்லது "டாடா"-வுடன் சேர்த்து இரண்டு அல்லது மூன்று வெவ்வேறு வார்த்தைகளை சொல்கிறார்களா
- [ ] வார்த்தைகளைப் பயன்படுத்தி பொருட்களை கேட்கிறார்களா
- [ ] சிறிது சிந்தி கோப்பையைப் பிடித்து குடிக்கிறார்களா
- [ ] பெயர் சொன்னால் பல்வேறு பொருட்கள் அல்லது படங்களைக் காட்டுகிறார்களா

### 18 மாதங்கள் - 2 வயது *உங்கள் குழந்தை...*

- [ ] அவர்களது கையால் பிடித்துக்கொண்டு மாடிப்படிகளில் மேலும் கீழும் நடக்கிறார்களா
- [ ] கிறுக்குகிறார்களா
- [ ] இசைக்கேற்றவாறு அவர்களது உடலை அசைக்கிறார்களா
- [ ] இரண்டு வார்த்தைகளை ஒன்றாக சொல்கிறார்களா ("இன்னும் ஜூஸ்")
- [ ] கேள்வி கேட்க ஆரம்பிக்கிறார்களா ("ஜூஸ்", "பாய்-பாய்")
- [ ] தாமாகவே சாண்ட்விச் எடுத்துக் கொள்கிறார்களா, கடித்து சாப்பிடுகிறார்களா
- [ ] காலணிகள் மற்றும் காலணி உறைகளை எடுக்கிறார்களா
- [ ] ஒரு வயது வந்தவருடன் உட்கார்ந்து கதைப்புத்தக படங்களை பார்க்கிறார்களா
- [ ] பொம்மைகளுக்குள் சாதாரண தேர்வுகளை செய்கிறார்களா (புதிர்கள் அல்லது வாகனங்கள்)
- [ ] மற்றொரு குழந்தை விளையாடுவதை காப்பியடிக்கிறார்களா (மண்ணைப் போடுதல், பந்தை எறிதல்)

### 2 - 3 வயது *உங்கள் குழந்தை...*

- [ ] நன்றாக நடக்கிறார்களா, ஓடுகிறார்களா, நிற்கிறார்களா, ஏறுகிறார்களா மற்றும் கீழே குந்துகிறார்களா
- [ ] மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களை அடுக்கி வைக்கிறார்களா
- [ ] தாமாகவே கப் மற்றும் ஸ்பூனை பயன்படுத்துகிறார்களா
- [ ] ஒரே நேரத்தில் இரண்டு அறிவுறுத்தங்களை பின்பற்றுகிறார்களா ("அந்தப் புத்தகத்தை எடுத்து மேஜைமீது வைக்கவும்")
- [ ] ஐந்து முதல் ஆறு வரையிலான அவர்களது உடல் பாகங்களின் பெயர்களை சொல்கிறார்களா
- [ ] சிறு உரையாடல்களில் கலந்துகொள்கிறார்களா
- [ ] சாதாரணமான "என்ன" மற்றும் "என்ன செய்கிறீர்கள்" போன்ற கேள்விகளுக்கு பதிலளிக்கிறார்களா ("மதிய உணவுக்கு உங்களுக்கு என்ன வேண்டும்?")
- [ ] பொருளின் பயனைச் சொல்லும்போது அந்தப் பொருளை சுட்டிக்காட்டுகிறார்களா அல்லது பெயரைச் சொல்கிறார்களா ("நீ எதில் வைத்துக் குடிப்பாய்?")
- [ ] சாதாரண பணிகளில் உதவி செய்கிறார்களா (பொம்மைகளை எடுத்தல்)
- [ ] 2-3 வார்த்தைகள் கொண்ட வாக்கியங்களை வழக்கமாக பயன்படுத்துகிறார்களா

### 3 - 4 வயது *உங்கள் குழந்தை...*

- [ ] நன்கு திடப்படுத்திக் கொண்டு குதிக்க, ஓட, எறிய, ஏற முடிகிறதா
- [ ] கிரேயானைப் பயன்படுத்தி வட்டங்கள், கோடுகள், குறுக்குக் கோடுகள் வரைகிறார்களா
- [ ] நடிப்பு விளையாட்டுக்கு பொம்மைகளையும் பிற பொருட்களையும் பயன்படுத்துகிறார்களா
- [ ] படப்புத்தகங்களைப் படித்து மகிழ்கிறார்களா
- [ ] பொருட்கள் எங்குள்ளன என்று சொல்லக்கூடிய வார்த்தைகளைப் புரிந்துகொள்கிறார்களா (பின்னால், கீழே, உள்ளே, மேலே)
- [ ] எளிதாகப் புரிந்துகொள்ளும்படி பேசுகிறார்களா
- [ ] அதிகளவு "ஏன்", "என்ன" கேள்விகளைக் கேட்கிறார்களா
- [ ] பிற குழந்தைகளுடன் விளையாடி மகிழ்கிறார்களா
- [ ] தங்கள் முறைக்காக சற்றுநேரம் காத்திருக்கிறார்களா
- [ ] எளிய "எங்கு", "யார்" கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்களா

### 4 - 5 வயது *உங்கள் குழந்தை...*

- [ ] பெரிய தசைகளைப் (கால்கள் போன்றவை) பயன்படுத்தும் உருண்டு விழுதல், நடனம் அல்லது பிற விளையாட்டுகளை ஆடுகிறார்களா
- [ ] ஒரு காலைத் தூக்கி தட்டுகிறார்களா
- [ ] முகத்தைப் போலத் தோன்றக்கூடிய முகத்தை வரைகிறார்களா
- [ ] சற்று உதவியுடன் உடை அணிய முடிகிறதா
- [ ] "என்ன, எங்கே, யார், ஏன்" பயன்படுத்தி கேள்வி கேட்கிறார்களா
- [ ] "ச, ழ, த், மற்றும் ர" தவிர்த்த பெரும்பாலான சப்தங்களைத் தெளிவாக உச்சரித்தல்
- [ ] அளவு மற்றும் எண்ணைக் குறிக்கும் (பெரிய, நிறைய) சொற்களைப் பயன்படுத்துகிறார்களா
- [ ] தங்கள் முதல் மற்றும் கடைசிப் பெயரைச் சொல்கிறார்களா
- [ ] ஒரே வயதுடைய குழந்தைகளுடன் விளையாடி மகிழ்கிறார்களா

### 5 - 6 வயது *உங்கள் குழந்தை...*

- [ ] ஒரு பந்தை கேட்ச் செய்து, எறிந்து, உதைத்து மகிழ்கிறார்களா
- [ ] பெரிய தசை விளையாட்டுகளை ஆடும்போது (அடையாளக்குறி (tag), உருளுதல், பேஸ்பால்) சமநிலையில் இருக்க முடிகிறதா
- [ ] கத்தரிக்கோலால் வெட்டுவதை இரசிக்கிறார்களா
- [ ] பொத்தான்களை மாட்டுவது, நொடிப்பது, ஜிப் போடுவது உட்பட அவர்களாகவே ஆடையுடுத்த முடிகிறதா
- [ ] வார்த்தைகளில் எழுதுவதில் ஆர்வம் காட்டுகிறார்களா
- [ ] குடும்பத்தினர் பேசுவதுபோலப் பேசுகிறார்களா (ஒரேமாதிரி வார்த்தைகள் வாக்கியங்களைப் பயன்படுத்துதல்)
- [ ] கொடுக்கப்பட்ட வரிசையில் மூன்று படிநிலை வழிகாட்டுதலைப் பின்பற்றுகிறார்களா ("பந்தை எடு, பொம்மை பெட்டியில் அதைப் போடு, பின் மேசைக்கு வா.")
- [ ] தங்கள் முழுப்பெயர், வயது பாலினத்தைச் சொல்கிறார்களா
- [ ] பிற குழந்தைகளுடன் திட்டமிட்ட விளையாட்டுகளை (Simon says, tag) இரசிக்கிறார்களா


## தொடர்புக்கு:

**Washington மாகாண Department of Children, Youth & Families Early Support for Infants and Toddlers (குழந்தைகள், இளைஞர்கள் & குடும்பங்கள் துறையின் குழந்தைகள் மற்றும் மழலையர்களுக்கான ஆரம்பகால ஆதரவு) திட்டம்**

PO Box 40970
Olympia, Washington
98504-0970

**esit@dcyf.wa.gov**

**www.dcyf.wa.gov/services/child-development-supports/esit**

**'Help Me Grow (நான் வளர உதவுங்கள்)' Washington**
தொலைபேசி: 1-800-322-2588



*DCYF இனம், நிறம், பாலினம், மதம், நெறி, திருமண நிலை, தேசியம், பாலியல் நோக்குநிலை, வயது, அனுபவமுள்ள நபர் என்ற நிலை அல்லது உடல், உணர்ச்சிகள் அல்லது மனநல குறைபாடு போன்றவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து நபர்களுக்கும் அதன் திட்டங்களுக்கும் சேவைகளுக்கும் பாகுபாடு காட்டாது, அதோடு சமமான அணுகலை வழங்குகிறது.*

*மாற்று வடிவம் அல்லது மாற்று மொழியில் இந்த வெளியீட்டின் இலவச நகல்களை நீங்கள் பெறவிரும்பினால், DCYF Constituent Relations (DCYF தொகுதித் தொடர்புகள்) 1-800-723-4831 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும் அல்லது மின்னஞ்சல் செய்யவும்* **communications@dcyf.wa.gov**.



DCYF PUBLICATION FS_0030 | DEL 11-002 TM (07-2023) Tamil